2000 மே 11]

திரு. பா. வேல்துரை: தலைவர் அவர்களே,....

திரு. ரா. ஈஸ்வரன்: Speaker sir, Point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்திய விடையைக் கொடுப்பார்கள் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஆகவே, புலிகளிலே வரிப்புலி என்பது பட்டை பட்டையாக இருப்பதால்தான் அதற்கு வரிப்புலி என்று பெயர். ஆக, புலி, வேங்கைப்புலி, வரிப்புலிதான். அதனாலே, புலிகளை வேட்டையாடுகையில், கண்ணி வைத்துப் பிடிப்பது மற்றும் துப்பாக்கியால் சுடுவது என்று பல்வேறு முறைகளை வேட்டையாடுபவர்கள் கையாளுகிறார்கள். ஆனால், இதுவரையிலே அரசுக்கு—எங்களுக்குக்—கிடைத்திருக்கிற தகவல், யானையை வேட்டையாடுகிற அளவிற்குப் புலிகளை அவர்கள் வேட்டையாடுவது இல்லை என்று புள்ளிவிவரங்கள் கிடைத்திருக்கின்றன. சில நேரங்களில் இயற்கையாகவே இறந்து விடுகின்றதே தவிர, வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 587, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

587—

வனவிலங்கு சரணாலயம்

***34531**—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள முல்லை நகர் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான சுமார் ஆயிரம் ஏக்கரில் வன விலங்கு சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள முல்லை நகர் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில், வன விலங்குகள் ஏதுமில்லாததால், இந்த இடத்தில் வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். அழகராஜா இருக்கையில் இல்லை. வினா எண் 588, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

588—

பணிமனை

***17856—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறையில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சீ.வெ. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறையிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். குஜிலியம்பாறை திண்டுக்கல்லிலிருந்து 45 கிலோமீட்டர் தூரத்திலும், வேடசந்தூரிலிருந்து 35 கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிறது. அரசுப் பேருந்து பழுதாகிவிட்டால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பணிமனை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறையிலேயும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. இப்படி இரண்டேயிரண்டு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்ற பகுதியில் ஒரு